**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.127/2026</u>**

**ம.சா.** 3 திரு.தமிழரசன் **<u>நாள் : 27.03.2026</u>**

1, 2 **எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**எனக்கு விபத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்களை எனது அக்கா சொல்லி தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். விபத்திற்கு யாருடைய அஜாக்கிரதை காரணம் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தந்தையின் வயது** 68 **ஆகும். ஆனால் பிரேத பரிசோதனை அறிக்கையில் வயது** 70 **என்று கண்டுள்ளது என்றால் அதில் தவறுதலாக போட்டுவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில்** 70 **என்று குறிப்பிட்டு பின்னிட்டு** 68 **என்று திருத்தியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை டிவிஎஸ்** 50 2145 **என்ற வாகனத்தில் சென்றார். அந்த வாகனம் எனது அப்பாவுக்கு சொந்தமானது. எனது தகப்பனார் பெயரில் உள்ள ஆர் சி புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். (அது ஏற்கனவே ம.சா.ஆ.-- ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.) எனது தகப்பனாருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இருந்ததாக ஞாபகம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் வாகனமே ஓட்டத்தெரியாது என்றால் சரியல்ல. அவ்வாறு ஓட்டத் தெரியாத நிலையில் இருசக்கர வாகனததை ஓட்டிச் சென்று தானாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது தந்தை ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஹெல்மெட் அணிந்து பயணித்திருந்தால் தலைக்காயம் ஏற்பட்டு உயிர்அபாயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்தவுடனே எனது தகப்பனார் மட்டுமே வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். எனது தந்தையுடன் பயணித்த எனது அக்கா மருத்துவ சிகிச்சை எதுவும்**

பெறவில்லை என்றால் சரிதான். வாணியம்பாடி அரசு மருத்துவமனையிலிருந்து வேலூர் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு பரிந்துரைத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் எனது தந்தையை கிருஷ்ணகிரியில் உள்ள சாதாரண தனியார் மருத்துவமனையில் அனுமதித்தோம் என்றால் சரியல்ல. அது உயர்சிகிச்சை மருத்துவமனை ஆகும். வேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை கொடுத்திருந்தால் தரமான சிகிச்சை அளிக்கப்பட்டு எனது தந்தை உயிர் பிழைத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அதை காட்டிலும் உயர்வான multispeciality மருத்துவமனையில்தான் சிகிச்சை கொடுததோம். எனது தகப்பனார் கிருஷ்ணகிரி அருண் என்ற தனியார் மருத்துவமனையில் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். அங்கு உடல்நலம் கவலைக்கிடமாக ஆனதால் சேலம் எஸ் கே எஸ் மருத்துவமனையில் அனுமதித்தோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் கிருஷ்ணகிரி மருத்துவமனையில் தரமான சிகிச்சை அளித்ததாக குறிப்பாக சொல்லாமல் இருந்துவிட்டு சேலம் எஸ் கே எஸ் மருத்துவமனையில் தரமான சிகிச்சை அளித்ததாக கூறியதிலிருந்தே நாங்கள் முந்தைய சிகிச்சை நல்லமுறையில் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர்மீது எனது தகப்பனார் கொடுத்த புகாரின்பேரில் குற்ற வழக்கானது நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அந்த வகையில் இந்த விபத்திற்கு எனது தகப்பனாரின் கவனக்குறைவுதான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. (சாட்சி திட்டவட்டமாக மறுக்கிறார்) . மேற்படி குற்ற வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, எனது தகப்பனார்தான் சாலையில் இடதுபுறமாக வலதுபுறம் திடீரென்று திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்று ஒப்புக்கொண்டுள்ளார் அது பற்றி எனக்கு தெரியாது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தில் முன்புறம் எந்தவித சேதாரமும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார்

வாகன ஆய்வறிக்கை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் டிவிஎஸ் 50 வாகனத்தின் முன்புறத்தில் எந்த சேதாரமும் இல்லை என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் விவசாயம் செய்து மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் காய்கறி வியாபாரம் செய்து சம்பாதித்து வந்ததை காட்டும் நிலங்களின் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்குண்டான வரவு செலவுகளை காட்டும் வங்கி புத்தகத்தை தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரிக்கு திருமணமாகி கணவருடன் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். நானும், எனது சகோதரரும் திருமணத்திற்கு பின்னிட்டு தனிதனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் எனது தகப்பனாரின் வருமானத்தை சார்ந்து வாழ்ந்து வந்தோம் என்று சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.21, 22 ஆவணங்களில் அட்வான்ஸ் தொகைக்காக தனி பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவை மொத்த பில்களின் உள்ளடக்கம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள போக்குவரத்து பில்களானது வழக்கிற்காகவேண்டி பின்னிட்டு தயாரிக்கப்பட்டதால்தான் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. விபத்தானது எனது தகப்பனாரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கானது 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.